

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (18.10.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்(பொ) க.பணீந்திர ரெட்டி, கனிம வளத்துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், மற்றும் கனிம வளத்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

### நவ. 1 முதல் 50 சதவிகிதத்திலிருந்து 53 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படும்!

# அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.20-**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல முன்னோடி நலத்திட்டங்களை மக்கள் நலன் கருதி சிறப்புற நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு கருத்தில் கொண்டு, அவர்களது நலன் காக்கும் வகையில் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.07.2024 முதல் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 53 சதவீதமாக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதனை கனிவுடன் பரிசீலித்து 01.07.2024 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 3 சதவீதம் உயர்ந்து 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1931 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# புதிய மின்மாற்றிகள் - 285 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து வழங்கினார்!

*புதுக்கோட்டை, அக். 20-*

*புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், புதிய மின்மாற்றி களை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 18.10.2024 அன்று துவக்கி வைத்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.*

*பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;*

*தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்கு தேவையான சாலை வசதி, மின்வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மின்மாற்றிகளை துவக்கி வைத்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்பட்டது.*

*அதன்படி, திருமயம் ஊராட்சி ஒன்றியம், கே.பள்ளிவாசல் மற்றும் கீழகுளத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய மின் மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதியில் உள்ள வீடுகள், விவசாயம், வணிக நிறுவனங்களுக்கு சரியான அளவுகளில் சீரான மின்விநியோகம் வழங்கப்படும்.*

*அதனைத் தொடர்ந்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பொன் புதுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 158 மாணவிகளுக்கும், மேலத்தானியம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 27 மாணவர்களுக்கும், 38 மாணவிகளுக்கும், நல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 36 மாணவர்களுக்கும் 26 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 285 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவிகள் அனைவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட இந்த விலையில்லா மிதிவண்டியின் மூலம் நாள்தோறும் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்று வருவதற்கு உறுதுணையாக இருக்கும்.*

*எனவே, தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர் அலி, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், மின்சார வாரிய செயற்பொறியாளர் எம்.ஆனந்தாய், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம்,*

*பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ஆ.ரமேஷ், பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, வட்டாட்சியர்கள் புவியரசன் (திருமயம்), எம்.சாந்தா (பொன்னமராவதி), மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சாலை செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.*

### பெரம்பலூர் மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ந.ஜெகதீஸ்வரன் அவர்கள் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 23 (புதன்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் பெரம்பலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# திருத்தணி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருத்தணி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்த்தி ரவி சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **கே. இராஜேந்திரன்** (2/20ஏ, பொந்தால கண்டிகை கிராமம், வி.கே.ஆர்.புரம் அஞ்சல், திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் 631 205.) அவர்கள் திருத்தணி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் ஏ.அப்பாஸ்கான் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா கார்த்தி வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் எம். பிரதாப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.இரா.சுகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை திருக்கார்த்திகை மகா தீபத் திருவிழாவை முன்னிட்டு, கிரிவல பாதையில் பக்தர்கள் வசதிக்காக சீனிவாசா பள்ளி அருகே தனியார் பங்களிப்புடன் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சுகாதார வளாக கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2024) திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் பக்தர்கள் வசதிக்காக நெடுஞ்சாலைத்துறை மூலமாக ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திறந்து வைத்தார். மேலும், ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் புதியதாக 6 சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை விரைந்து மேற்கொண்டு தீபத் திருவிழாவிற்குள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் உள்ள வீராணம் ஏரி முழு கொள்ளளவான 47.50 அடியான நிரம்பிய வீராணம் ஏரியை தமிழ்நாடு வேளாண்மைமற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.